II ADJ COURT TRICHY

DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :137/2026**

**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness -5 (LW -7)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.ஆசை தம்பி** | Caste | : |
| Father Name | : **திரு.குருநாதன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.06.2026.**

**PW -5 (LW -7 )**

(எதிரி ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 18.04.2025–ம் தேதி அன்று முசிறி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது நானும், காவலர்களும் ரோந்து பணிக்கு சென்ற பொழுது எதிரி செல்வகுமார் என்பவரது கடையை பரிசோதனை செய்து ஆய்வு மேற்கொண்ட பொழுது அந்த கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள் மற்றும் விமல் பான்மசாலா மொத்தம் 30 பாக்கெட்டுகள் கைப்பற்றி நிலையம் வந்து நிலைய குற்ற எண்.143/2025, சட்டப்பிரிவுகள் 275, 123 BNS Act r/w 6, 24(1) of COTPA Act–ன் கீழ் வழக்கினை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.1** ஆகும்.

கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.2**. சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3**. மாதிரி

வரைபடம் **அ.த.சா.ஆ.4**. கைப்பற்றப்பட்ட தடயங்களை நகராட்சி ஆணையர் முசிறி அவர்களுக்கு அழிக்க கடிதம் அனுப்பி வைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>**எ.த.கு.வி**</u> :

| | |
|---|---|
| **கேள்வி** | முதல் தகவல் அறிக்கையில் தகவல் எவ்வாறு கிடைத்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | உயர் அதிகாரி மூலம் கிடைத்த ரகசிய தகவல். |
| **கேள்வி** | முதல் தகவல் அறிக்கையில் 02.00 மணிக்கு சிட்லரை கிராமத்திற்கு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.3 பி–ல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.04.2025 15.30 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | வழக்கு பதிவு செய்யப்பட்ட நேரம். |
| **கேள்வி** | சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வுகளை மேற்கொள்வதற்கு உயர் அதிகாரிகளிடம் உத்தரவு ஏதும் பெற்று சென்றீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | ஒரு இடத்தை சோதனை செய்வதற்கு ஆட்சேபனை எதுவும் இருக்கிறதா என்று எதிரிக்கு நோட்டீஸ் கொடுத்தீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | ஹான்ஸ், பான்மசாலாக்கள் பகுப்பாய்வு செய்வதற்காக கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கு சீல், எண் கொடுத்து சீல் வைக்கப்பட்டதா என்றால்? |
| **பதில்** | ஞாபகம் இல்லை. |
| **கேள்வி** | உயர் அதிகாரிகள் வேண்டுகோளுக்கு இணங்க காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தடய பொருட்களும், சாட்சிகளும் ஜோடித்து எதிரிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | சொன்ன நேரத்தில்,. சொன்ன இடத்தில் எந்த ஆய்வும் செய்யவில்லை என்றாலும், எதிரியின் கடையில் இருந்து எந்த தடய பொருட்களும் கைப்பற்றவில்லை என்றாலும்? |

HIGH COURT OF JUDICATURE MADRAS

| | |
|---|---|
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

**மறுவிசாரணை :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 10.06.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 10.06.2026

III ADJ COURT, TRICHY